<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

எம்.சி.ஓ.பி.எண். 441/2019 நாள்.08.03.2024

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 8-ம் நாள் மனுதாரர் தரப்பு **ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | ராஜேந்திரன் | சாதி | |
| கிராமம் | பெரியநொளம்பை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 33 |

<u>ம.சா.1</u>

<u>குறுக்கு விசாரணை</u>

சென்னை காமராஜர் சாலையில் காலேஜ் எதிரில் நடந்தது. விபத்தில் பேருந்தும், காரும் மோதிக்கொண்டது. காரை நான் ஓட்டிசென்றேன். விபத்தில் மொத்தம் 3 பேர் காயம் பட்டார்கள். விபத்தில் நான் காயம் பட்டதற்காக நஷ்டஈடு கோரி தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் நான் ஓட்டிசென்ற காரின் உரிமையாளரையும், காப்பீட்டுதாரரையும் தரப்பினராக சேர்க்கவில்லை. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிசென்றேன் அப்போது எதிரே பேருந்து வந்தது. பேருந்திற்கு முன்பு இருசக்கரவாகனத்தில் சென்றவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். மேற்படி இருசக்கரவாகனத்தின் மீது மோதாமல் இருப்பதற்காக பேருந்து ஓட்டுனர் பேருந்தை வலதுபுறமாக திருப்பி நிறுத்திவிட்டார். அப்போது நான் ஒட்டிசென்ற கார் கட்டுபடுத்த முடியாமல் பேருந்து மீது மோதிவிட்டது. விபத்தில் எனக்கு வலதுகையில் எலும்புமுறிவு ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை ராயப்பேட்டை அரசமருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு 2 மணிநேரம் சிகிச்சை அளித்து பின்னர் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைகது அனுப்பிவைத்தனர். அங்கு 27 நாட்கள் சிகிச்சை அளித்தனர். நான் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்தேன். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொள்ளவில்லை. விபத்து நடக்கும்போது எனக்கு 29 வயதிருக்கும். என வயதை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளேன். பள்ளி கல்வி சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. நான் மாத சம்பளத்திற்கு ஓட்டுனராக வேலை செய்தேன். நான் ஓட்டுனராக வேலை செய்ததற்கும் சம்பளம் பெற்றதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நான் மாதம் ரூ.25,000 சம்பாதித்ததாக அதிக நஷ்டஈடு பெறுவதற்காக சொல்லியுள்னே் என்றால் சரியல்ல. நான் ஓட்டிசென்ற காரின் உரிமையாளரையும்,

காப்பீட்டு தாரரையும் சேர்க்காததால் இவ்வழக்கு ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தற்போது ஓட்டுனராக வேலை செய்யவில்லை. நான் மளிகை கடையில் வேலை செய்கிறேன். நான் தற்போது ஓட்டுனராக வேலை செய்து சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு தொகை ரூ.15 லட்சம் அதிகம் என்றாலும் அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.